**நிகழும் திருவள்ளுவராண்டு விகாரி வருடம் 2019-ம் ஆண்டு நவம்பர் மாதம் 15-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11:00 மணிக்கு நடைபெற்ற வால்பாறை நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள் விபரம்.**

**பொருள் : 1**

அரசாணை எண்.(M.S) 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள் 19.11.2019-ன் படியும், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1 நாள்.20.11.2019-ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின் படியும் அரசாணை எண்.73 மற்றும் அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.07.2019 மற்றும் 26.07.2018-ன் படியும் 01.04.2018 தேதி முதல் சொத்துவரி பொது சீராய்வு ( Revision of Property Tax) மூலம் உயர்வு செய்யப்பட்ட சொத்துவரி சீராய்பு உயர்வினையும், சொத்துவரி விதிப்புக்கான மண்டல மற்றும் (Zonal Value) 01.04.2018 முதல் உயர்த்தப்பட்டதையும் மற்றும் 01.10.2017-ம் தேதி முதல் சொத்துவரி மறு சீராய்வு (Remeasurement) செய்து உயர்த்தப்பட்டதையும் நிறுத்தி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ள அரசாணை மற்றும் சுற்றறிக்கையில் உள்ள விவரங்கள் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் தகவருக்காகவும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அரசாணை மற்றும் சுற்றறிக்கையினையும் பதிவு செய்யலாம்.
2. மன்றம் அனுமதிக்கலாம்.

**நகரமன்ற தீர்மான எண். 447 மன்றம் அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் : 2

இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளில் தெருமின் விளக்குகளின் பராமரிப்பு பணி தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சியானது மலை பிரதேசமாக உள்ளதாலும், விலங்குகளின் நடமாட்டம் அதிகமாக உள்ளதாலும். நகராட்சி பகுதிகளில் உள்ள சுமார் 2936 எண்ணிக்கை மின் விளக்குகளை பொது மக்கள் நலன் கருதி உடன் வரிசெய்து கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது, மேலும் வனவிலங்குகள் அதிக நடமாட்டம் உள்ள சில பகுதிகளில் யானை, சிறுத்தை கரடி ஆகியவற்றால் இரவு நேரங்களில் மக்களின் பொது மக்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுகிறது. கடந்த சில மாதங்களில் இரவு நேரத்தில் சுமார் 7 நபர்கள் வன விலங்கு தாக்குதலால் உயிரிழந்துள்ளனர். எனவே இந்நகராட்சி பகுதிகளின் தெரு விளக்கின் அவசர அவசியம் கருதி சுமார் 300 எண்ணிக்கை LED மின் விளக்கு 72 அல்லது 75 வாட்ஸ் கொள்முதல் செய்து கையிருப்பில் வைத்து பழுது பட்ட மின் விளக்குகளை உடனுக்குடன் சரி செய்து மின் கம்பத்தில் பொருத்திக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், மேற்படி தெரு மின் விளக்குகளை விநியோகம் பெற நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை, அவர்களின் தலைமையிலும், நகராட்சி நிர்வாக கண்காணிப்பு பொறியாளர் அவர்களின் தொழில் நுட்ப குழு, நாள்21.06.2018-ன்படி பரிந்துறை செய்யப்பட்டுள்ள விநியோக விலையிற்குட்பட்டு LED மின் விளக்குகளை அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து விநியோகம் செய்து கொள்ளலாம் என உத்திரவிடப்பட்டுள்ளது.

எனவே மேற்படி குழுவின் பரிந்துறை அடிப்படை விலையில் தெருவிளக்குகளை விநியோகம் செய்யவும், அதற்கான செலவினம் தோராயமாக ரூ.40.00 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் கண்காணிப்பு பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை, அவர்களின் தொழில் நட்ப குழு நிர்ணயிக்கப்பட்டுள்ள விலையிற்குட்பட்டு அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து விநியோகம் பெறவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அவசர அவசியம் கருதி அனுமதி வழங்கலாம்.

**நகரமன்ற தீர்மான எண். 448 மன்றம் அங்கீகரிக்கப்பட்டது.**